1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் பெண்களுக்கான இந்தக் கமிஷன் அமைப்பதற்கு முன்பே தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையிலே பெண்களுக்கு 30 சதவீதம் தரவேண்டும் என்று சொல்லியிருந்ததை இந்த அரசு நடைமுறைப்படுத்தத் தொடங்கிவிட்டது. ஏனென்றால் தேசிய முன்னணி அரசு கடந்த 5, 6 மாதங்களுக்கு முன்புதான் பொறுப்புக்கு வந்தது. தேசிய முன்னணியிலே அங்கம் வகிக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு 1989-ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே ஆட்சிப் பொறுப் புக்கு வந்துவிட்ட காரணத்தால் தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையில் உள்ள பெண்களுக்கு 30 விழுக்காடு என்பதை, தொடர்ந்து, கடந்த காலத்திலே இருந்து-ஓராண்டு காலத்திற்கு மேலாக அமல்படுத்தி வருகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் சொன்ன, மாநில அளவிலே இந்தக் கமிஷன் அமைப்பதைப் பற்றி, மத்தியிலே இந்தக் கமிஷன் அமைந்ததை யொட்டி யோசிக்கப்படும்.

வி. ஐ. பி.க்களின் பாதுகாப்பிற்காகத் தனியாகப் பாதுகாப்புப் படை அமைத்தல்

*6632. திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வி. ஐ. பி-க்களின் பாதுகாப்பிற்காக தனியாக பாதுகாப்புப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

வி. ஐ. பி.க்களின் பாதுகாப்பிற்காகத் தனியாக பாதுகாப்புப் படை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் இல்லை.

விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி

*8141. டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசினர் தரப்பில் கோவளம் அருகில் விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

டாக்டர் து. திருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவளம் என்பது செங்கை அண்ணா மாவட்டத்தில் இரண்டாவது சுற்றுலா மையமாக அமைந்திருக்கிறது. பரந்த மணற்பரப்பும், அதற்கடுத்தாற்போல் படகுக்குழாமும் இருக்கின்ற காரணத்தால் இதைக் கருத்தில் கொண்டு மீண்டும் அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, கோவளத்தில் விளையாட்டுப் பயிற்சிக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பது பற்றியதாகும். அந்த இடம் நல்ல, சுற்றுப் பயணத்திற்கேற்ற இடமாக இருப்பதால் அந்த நோக்கத்தில் அந்த இடத்தைப் பயன்படுத்தலாம்.

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த செல்வராஜ் ராபர்ட் 100 மீட்டர், ஏஞ்சலின் — ஹை ஜம்ப், நிஜாமுதீன்— டிரிபிள் ஜம்ப் போன்ற விளையாட்டுகளில் ஏஷியன் அளவிலே முதல் இடத்தில் வந்துள்ளார்கள். மேலும் சிறந்த விளையாட்டு வீரர்களை மேலும் சிறந்தவர்களாக ஆக்குவதற்கு கேரளா, கர்நாடகா போன்ற பல்வேறு மாநிலங்களில் இன்டர் நேஷனல் அளவிலே விளையாட்டுத் திடல்களை அமைத்திருக்கின்றன. அதுபோன்று தமிழகத்திலும் அமைக்கிற நோக்கம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துவதற்கும், மிகப் பெரிய பாராட்டுக்குரிய வீரர்களுக்கு தனி ஆதரவு வழங்குவதற்கும் தனித்தனியாக விளையாட்டுத் துறையால், அவை பரிசீலிக்கப்படும். அப்படிப்பட்டவர்கள் விரும்பக்கூடிய தனி ஆதரவை அல்லது தனிப் பயிற்சியைத் தேவைக்கேற்பப் பெறுவதற்கு அவர்கள் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

1990 ஆகஸ்ட் 20]

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது B.Sc (Physical Education and Health) என்று ஒரு Course ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டே இரண்டு கல்லூரிகள், அதாவது நெல்லையிலே ஒரு கல்லூரிக்கும் சிவகாசியில் ஒரு கல்லூரிக்கும் தரப்பட்டிருக்கிறது. இதற்கு மத்திய அரசுதான் பணம் தருகிறது. பல கல்லூரிகளும் தங்களுக்கு இந்தப் படிப்பு வகுப்புகள் வேண்டுமென்று கேட்டால், அப்படிக் கேட்கின்ற கல்லூரிகளுக்கு, விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கின்ற வகையில், அதைத் துவங்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக் குழு அப்படிப்பட்ட உடற்பயிற்சிக் கல்வியையும் கலைக் கல்லூரிகளில் நடத்துவதை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களிடத்திலே உரிய விண்ணப்பம் கொடுத்து அதை ஏற்றுக் கொண்டுள்ள அளவிற்கு நான்கைந்து இடங்களில் ஆரம்பிப்பதற்கு மாநில அரசு ஆதரவான கருத்தைத் தெரிவித்திருக்கின்றது. பல்கலைக் கழக மானியக் குழு நிதி வழங்குகின்ற அளவுக்கு, அது உறுதியாகிற அளவுக்கு அந்த வகுப்புகள் அதற்குரிய அந்தக் கல்லூரிகளில் தொடங்கப்படும்.

தமிழ் மொழிப் போராட்ட வீரர்களுக்குக் கொடுக்கப்படும் ஓய்வூதியம்

*8196 திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் மொழிப் போராட்ட வீரர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் அவர் மரணத்திற்குப் பின் அவரது மனைவிக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எம். முத்தையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிப் போராட்ட வீரர்களுக்கு இதுவரை எத்தனை பேருக்குப் பென்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது ?